# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • மார்ச் 16, 2024

Weekly E-paper • March 16, 2024


# 22,217 தேர்தல் பத்திரங்களில் அம்பானி, அதானிகளைக் காணவில்லையே!

சாரதா தேவி



கொளத்தூர் மணி நேர்காணல்





இயக்கச் செய்திகள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்


வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மார்ச் 16, 2024 Weekly E-paper ● March 16, 2024


# 22,217 தேர்தல் பத்திரங்களில் அம்பானி, அதானிகளைக் காணவில்லையே!

**சாரதா தேவி**

சென்ற வாரம் தேர்தல் பத்திர விவரங்களைத் தாக்கல் செய்ய 3 மாதகால அவகாசம் கேட்ட பாரத ஸ்டேட் வங்கி, உச்சநீதிமன்றத்தின் கடுமையான ஆணையால், ‘இல்லையில்லை உடனடியாகக் கொடுத்து விடுகிறோம்’ எனப் பணிந்தது. உச்சநீதிமன்றத்தில் இரண்டு கோப்புகள் அடங்கிய ஒரு பேனாச் சேமிப்பைக் கொடுத்துவிட்டது. அதைத் தேர்தல் ஆணையம் நேற்று தன் வலை தளத்தில் ஏற்றியது.

337 பக்கங்கள் கொண்ட ஒரு கோப்பில் தேர்தல் பத்திரங்களை வாங்கிய நிறுவனங்களின் பெயர், எவ்வளவு தொகைக்கு வாங்கினார்கள் என்ற விவரமும், 426 பக்கங்கள் கொண்ட மற்ற கோப்பில் கட்சிகளின் பெயர்களும், அவர்களுக்குக் கிடைத்த தொகையும் என ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்த முடியாத விவரங்கள் இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. தேர்தல் பத்திர எண்களை இரு கோப்புகளிலும் வழங்காததால், எந்தக் கட்சிக்கு எந்த நிறுவனம் எவ்வளவு கொடுத்தது என விளக்கம் பெற முடியவில்லை.




ஆனால், கொடுத்த குறைந்த விவரங்களில் இருந்தே பல மோசடிகள் அம்பலத்துக்கு வந்துள்ளன. பல போலி நிறுவனங்கள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது இப்போது அம்பலமாகி உள்ளது. அரசியல் நன்கொடைகளை வங்கிகளின் மூலம் வெளிப்படைத் தன்மையுடன் பெறுவதாக அறிவித்தவர்களின் மோசடி நோக்கம் இப்போது தெளிவாகத் தெரிகிறது.

இவர்கள் பாகிஸ்தான் புல்வாமா தாக்குதல் நடத்துகிறது என்று சொல்லிக்கொண்டே, பாகிஸ்தானின் ஒரே மின்சார நிறுவனமான “ஹப் பவர்” நிறுவனத்திடம் கூட தேர்தல் பத்திரங்களை ரூ.1 கோடிக்கு வாங்கி இருப்பது தெரிய வந்துள்ளது.

அது மட்டுமல்ல பத்திரங்களை வாங்கியுள்ள பல நிறுவனங்கள், அதற்கு முன்னதாக அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, CBI உள்ளிட்ட அரசு நிறுவனங்களால் சோதனைக்கு உட்படுத்தப் பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது. அச்சுறுத்தலால் பல நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்களை வாங்கிக் கொடுத்திருப்பதும் இதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. 2019 முதல் 2024 வரை அதிகப்படியாக பத்திரங்களை வாங்கிய முதல் 5 நிறுவனங்களில், லாட்டரி நிறுவனமான ஃயூச்சர் கேமிங் அன் ஹோட்டல் சர்வீசஸ் (ரூ.1368 கோடி), மேகா எஞ்சினீரிங் அன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் (ரூ.966 கோடி) மற்றும் வேதாந்தா (ரூ.400 கோடி) ஆகிய 3 நிறுவனங்கள், அமலாக்கத்துறை மற்றும் வருமானவரித் துறை சோதனைகள் நடந்து அவர்களுடைய சொத்துகள் பறிமுதல் செய்யப்படவிருக்கும் மிரட்டலுக்கு நடுவிலே தான் இந்த தேர்தல் பத்திரங்களை வாங்கி உள்ளனர்.

மேகா எஞ்சினீரிங் நிறுவனம், ஏப்ரல் 2023இல் ரூ.100 கோடி நன்கொடையை, தேர்தல் பத்திரம் மூலம் கொடுத்த அடுத்த மாதமே ரூ.14,400 கோடி மதிப்பிலான சுரங்க சாலை கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தத்தைப் பெற்றிருக்கிறது. இப்படிப் பல சிறிய, அப்போதுதான் உருவாக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் வணிக ஒப்பந்தங்கள் லஞ்சமாகக் கொடுக்கப் பட்டிருப்பதும் இந்த விவரங்களைக் கொஞ்சம் ஆய்வு செய்தால் தெரிவதாக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த பூஷண் தன் எக்ஸ் தளத்தில்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# நாட்டையும், மதத்தையும் முன்வைக்கும் சட்டம் இது!

## கொளத்தூர் மணி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர்

கேள்வி: குடியுரிமைத் திருத்தச் சட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன? சற்று விளக்குங்கள்!

பதில்: குடியுரிமைத் திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டதில் இருந்தே பல எதிர்ப்புகள் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கின்றன. அச்சட்டத்தின் வரைவைக்கூட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்காமல் இரு அவைகளிலும்உடனடியாக நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவராலும் உடனே ஒப்புதல் வழங்கப்பட்டது



உறுப்பினர்கள் அச்சட்டத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூட நேரம் தராமல் அது நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்திற்காக வாக்களித்த பிஜு ஜனதா தளம், ஒய்.எஸ். ஆர். காங்கிரஸ் கட்சிகள் பின்னர் அதனை எதிர்த்தன என்பதில் இருந்தே அச்சட்டம் எவ்வளவு அவசரமாக நிறைவேற்றப் பட்டது என்பதைக் காட்டுகிறது.

இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளும், அண்டை நாடுகளா, எல்லை நாடுகளா என்ற குழப்பம் உள்ளது. ஆஃப்கானிஸ்தான் நமது எல்லை நாடு இல்லை. பாகிஸ்தான், வங்கதேசம் ஆகியவை நமது எல்லை நாடுகள். அண்டை நாடு என்றால் இலங்கை உள்ளது. பூட்டான் நமது எல்லை நாடு. ஆனால் இலங்கை, பூட்டான் ஆகியவை இச்சட்டத்தில் கொண்டு வரப்படவில்லை. பாகிஸ்தானில் அஹமதியா முஸ்லிம்களும், மியான்மரில் பவுத்தத்தால் பாதிக்கப்பட்ட ரோஹிங்யா முஸ்லிம்களும் இச்சட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

இந்தியாவின் அரசியலமைப்புப் பிரிவு 14-இன்படி எந்த ஒரு மனிதருக்கும் சமத்துவம் மறுக்கப்படக் கூடாது. இது குடிமகளாக / குடிமகனாக இருப்பவர்களுக்குமட்டுமன்று, எல்லாருக்கும் பொருந்தும். ஆனால், நாடு, மதம் ஆகியவற்றை முன்வைத்து இச்சட்டம் பாகுபாடு செய்கிறது. எனவே இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கே முரணானது.

சாவர்க்கரின் கூற்றுப்படி, இந்தியாவில் இந்துக்கள் தேசம், முஸ்லிம்கள் தேசம் என்று இரண்டு தேசங்கள் உள்ளதாகச் சொல்கிறார். கோல்வால்கரோ இந்துக்கள் அல்லாதவர்கள் இந்துக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவருடைய We or Our Nationhood defined என்னும் நூலில் கூறுகிறார். இவர்களுடைய முன்னோர்களின் கருத்துகளைப் பிரதிபலிப்பதாகத்தான் இவர்கள் இப்போது சட்டம் கொண்டு வந்துள்ளார்கள். அதே நேரம் கொடுமைக்கு ஆளான இலங்கைத் தமிழர்கள் சிறுபான்மையினர்தான். அவர்களுக்கு இச்சட்டம் தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. எனவே இதில் இவர்களது தமிழர் மற்றும் இஸ்லாமியர் மீதான் வெறுப்புதான் வெளிப்படுகிறது.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டி கோரப்படும் சான்றுகளிலும் ஏராளமான சிக்கல்கள் உள்ளன. இதன்படி இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களும் தாங்கள் இந்தியர்தான் என்று நிரூபிக்க, சான்றுகளைக் காட்டவேண்டி இருக்கும். இதன்மூலம் பா.ஜ.க.விற்கு சாதகமாக இல்லாதவர்கள் யாரையும் அவர்களால் பாதிப்பிற்கு உள்ளாக்க முடியும்.

வாஜ்பாய் காலத்திலேயே இதற்கான முயற்சிகள் தொடங்கி விட்டன. அவர்தான் detection, deletion, deportation என்ற மூன்று சொற்களைக் குறிப்பிட்டார். அவர்களைக் கண்டுபிடித்து, நீக்கம் செய்து, வெளியேற்று என்பதுதான் இதன் பொருள்.

அவர்களது நீண்ட கால அஜெண்டா இது. அவர்களது நோக்கம் மதவெறி மட்டும்தான். வேறு எதுவும் இல்லை.

நேர்காணல் எடுத்தவர்: **வெற்றிச்செல்வன்**

---

முன் பக்கத் தொடர்ச்சி...

பதிவு செய்துள்ளார். இந்த மேகா நிறுவனம் இன்னும் பல மாநிலங்களில் பல ஒப்பந்தங்களைப் பெற்றிருப்பதும், தலைமைக் கணக்காயரால் அந்த ஒப்பந்தங்களில் முறைகேடுகள் நடந்திருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது மட்டுமல்ல, 22,217 பத்திரங்களில் அம்பானி, அதானி வகையறாக்களின் ஒரு பெயர் கூட இடம்பெறவில்லை. எனில், அந்தப் போக்குவரத்து வேறு வகைகளில் தனியே நடைபெற்று வருகிறது என்பது தானே பொருள்?

இதில், பா.ஜ.க. வின் சமூக வலைத்தள அணியினர் இன்னும் முட்டு கொடுக்க, இப்படிச் சொல்கின்றனராம், “18 மாநிலங்களில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. கூட்டணி ரூ.11,500 கோடி தான். சராசரியாக ஒரு மாநிலத்துக்கு ரூ.638 கோடி தான்; ஒரே மாநிலத்தில் ஆட்சியில் இருக்கும் திரிணாமூல் காங்கிரசு போன்ற கட்சிகள் வாங்கியதை விட இது குறைவுதான்”! இது எப்படி இருக்கிறது? நன்கொடைகளை முறைப்படுத்துவதாகச் சொல்லித் தொடங்கப்பட்ட தேர்தல் பத்திர முறையின் முறைகேடுகளே இவ்வளவு என்றால், இன்னும் கணக்கு கோரப்படாத பி.எம்.கேர் நிதி ஆகியவற்றைத் தோண்டினால் என்ன ஆகும்?

இன்று மீண்டும் உச்ச நீதிமன்றம் தேர்தல் பத்திரங்களின் சிறப்பு வரிசை எண்களுடனான கோப்புகளைக் கேட்டிருக்கிறது. பாஜகவின் அடுத்த நகர்வு என்ன பார்ப்போம்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## வெல்லும் மக்கள் சக்தி!

புதுவை உள்பட 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணியே வெற்றி பெறும் என்று தேர்தல் கணிப்புகள் சொல்கின்றன.

மகிழ்ச்சிதான்! அப்படித்தான் நடக்கப் போகிறது என்பது முற்றிலும் உண்மை என்பதை நம் முதல்வரின் ஆட்சித்திறனும், மக்களின் மனநிலையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ஆனாலும் தேர்தலுக்கு இருக்கும் கொஞ்ச நாள்களில் களப்பணிகளில் தொய்வு இல்லாமல், கூடுதல் கவனத்துடன் கடுமையாக உழைக்க வேண்டும் தி.மு. கழகக் கூட்டணிக் கட்சியினர்.

காரணம், எதிர்ப்பது மோடியை அல்ல, வலிமையான பாசிச, சர்வாதிகாரத்தை.

பாஜக தலைமையில் மெகா கூட்டணி அமைப்போம் என்று சவடால் பேசினார் அண்ணாமலை.

இன்று மக்களின் வாக்குபலம் இல்லாத ஜி.கே. வாசன், டி.டி.வி. தினகரன், ஓ. பன்னீர்செல்வம், ஏ.சி. சண்முகம், பாரிவேந்தர், ஜான்பாண்டியன் போன்றவர்கள் பா.ஜ.வின் ‘மெகா’ கூட்டணியில் இணைந்திருக்கிறார்கள். இரவு இரண்டு மணிக்கு ஒருவரிடம் சோசியம் கேட்ட சரத்குமார், காலையில் பா.ஜ.கவில் கரைந்தே போய்விட்டார். பா.ம.கவும் இதில் சேரலாம். இதில் ஓரளவு சொல்லக் கூடிய அளவில் பா.ம.க இருந்தாலும் மற்றவை எல்லாம் உதிரிக்கட்சிகள் என்று சொல்வதில் தவறில்லை. இது ஒரு பலமான கூட்டணியா என்று நாம் இருந்துவிடக் கூடாது.

1951ஆம் ஆண்டு ஆர். எஸ். எஸ். அறிவுரையின்படி சியாமா பிரசாத் முகர்ஜியால் தொடங்கப்பட்ட ‘பாரதிய ஜனசங்கம்’, அடுத்த(1952) ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 3 இடங்களில் மட்டுமே வென்றது. 67 ஆண்டுகளுக்குப் பிறகு(பா.ஜ.க) அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 303.

தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவன் எதைப் பிடித்தாவது கரையேற முயல்வதுபோல, இன்று ஒரு கூட்டணியை அமைத்து, பார்... பார் பா.ஜ.க தலைமையில் கூட்டணி என்று ஒரு ‘தலைமைத் தோற்றத்தை’ உருவாக்கப் பார்க்கிறார் அண்ணாமலை.

ஆர். எஸ். எஸ். எப்போதும் தொலை நோக்குப் பலனைத்தான் குறிவைக்கும். நாம் எதிரியை பலவீனமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அதிலும் பணபலம், அதிகார பலம் கொண்டது பா.ஜ.க.

‘இந்தியா’ கூட்டணி வலிமையாக இருக்கும் நிலையில், SBI இன் தேர்தல் பத்திர ரகசியம், குடியுரிமைத் திருத்தச்சட்டம் நடைமுறை உள்ளிட்டப் பலவகைகளில் ஆளும் ஒன்றிய பா.ஜ.க அரசின் மீதும், குறிப்பாக பிரதமர் மோடியின் மீதும் அதிருப்தியில் இருக்கும் மக்களால் அவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டும்.

அப்படியானால் அ.தி.மு.க?..!அதுதான் தலைவர் ஸ்டாலின் அவர்கள் சொல்லி விட்டாரே அது ப.ஜ.கா வின் “கள்ளக் கூட்டணி” என்று.

திரளட்டும் மக்கள் சக்தி! வெல்லட்டும் ‘இந்தியா’ கூட்டணி!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408




‘சுயமரியாதை சமத்துவக் கழகம்’ காங்கேயம் I.N.D.I.A-வைப் பாதுகாப்போம் கூட்டத்தில் பேரவைத் துணைப் பொதுச் செயலாளர் காசு. நாகராசன்.

# "அரசிடம்தான் இருக்க வேண்டும் அறநிலையத் துறை, ஏன்?" - கருத்தரங்கம்

## திராவிட நட்புக் கழகம்














திராவிட நட்புக் கழகத்தின் நிறுவனர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் அழைப்பில், "அரசிடம்தான் இருக்க வேண்டும் அறநிலையத் துறை, ஏன்? " என்ற கருத்தரங்கம் திராவிட நட்புக் கழகத்தால் சென்னை, தேனாம்பேட்டை அன்பகத்தில் 10-03-2024 அன்று நடத்தப் பெற்றது. கருத்தரங்கிற்கு மாநிலத் தலைவர் ஆ.சிங்கராயர் தலைமை வகித்தார். முன்னாள் நீதியரசர் து.அரிபரந்தாமன், தோழர் மருதையன், தி.மு.க செய்தி மக்கள் பிரிவு மாநிலத் துணைத்தலைவர் ஆண்டாள் பிரியதர்சினி ஆகியோர் கருத்துரை நிகழ்த்த, நட்புக் கழக மாநில துணைத் தலைவர் ஸ்ரீவித்யா தொகுத்துரைத்தார். மாநிலப் பொருளாளர் இரா.தீபன் வரவேற்பில், மாநிலச் செயலாளர் ம. இளஞ்சித்திரன், செங்கல்பட்டு மாவட்டப் பொருளாளர் முத்துக்குமார், செங்கை மாவட்ட மருத்துவ அணிச் செயலாளர் விக்னேஷ் பாலன் ஆகியோர் முன்னிலை வகிக்க, கருத்தரங்க நிறைவில் மாநிலத் துணைப்பொதுச் செயலாளர் தாம்பரம் இளங்கோ நன்றி கூறினார்.

# தெற்கு மண்டல கலந்துரையாடல் கூட்டம்










திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தெற்கு மண்டல கலந்துரையாடல் கூட்டம் 10.03.2024 அன்று மதுரையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் தலைமையில், அமைப்புச் செயலாளர் புலேந்திரன், அறிவுரைஞர் குழு உறுப்பினர் புலவர் ஜெயபால் சண்முகம், திராவிட மாணவர் பேரவை மாநில அமைப்பாளர் நெல்லை பாபு, 'திராவிட முழக்கம்' பொறுப்பாசிரியர் குமரன்தாஸ் ஆகியோரின் முன்னிலை வகித்தனர். மதுரை மாவட்டச் செயலாளர் பி.அமர்நாத் வரவேற்புரை ஆற்றினார். பேரவை வளர்ச்சிப் பணிகள் குறித்தும், 2024 நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்தும் தோழர்கள் உரையாடினார்கள். துணைப் பொதுச் செயலாளர் இராம.வைரமுத்து ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில். தோழர் ஸ்டுடியோ சரவணன் நன்றி கூறினார்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian